(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 157.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2011 திசெம்பர் 19, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1063/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1488/ '11

2.

கௌரவ அஜித் குமார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்வலு, எரிசக்தி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1555/ '11

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்திலுள்ள மொத்த மற்றும் சில்லறை மீன் விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவ்விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களில் சென்ற் ஜோன் மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் யாவை;

(ii) சென்ற் ஜோன் மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றிருக்காவிடினும் பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் யாவை;

(iii) இவர்களுக்கு இவ்வாய்ப்பை வழங்குவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1569/ '11

4\.

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தால் நிர்வகிக்கப்படுகின்ற ஊருபொக்க கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள ஆசிரிய விடுதி தூர இடங்களிலிருந்து சேவைக்கு சமூகமளிக்கின்ற ஆசிரியர்களுக்கு விடுதி வசதியை வழங்குகின்றதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி ஆசிரியர் விடுதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் புனரமைப்பு நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1730/ '11

5.

கௌரவ அநுர திசாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு பேணிவரப்படுகின்ற கட்டிடத்தின் உரிமை அரசாங்கத்திற்கு சொந்தமானதா என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுக் கட்டிடம் 2010 அல்லது 2011 ஆம் ஆண்டில் சீர்திருத்தப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், இக்கட்டிடத்தின் எப்பகுதிகள் புனரமைக்கப்பட்டன என்பதையும்;

(iv) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(v) அக்கம்பனியை தெரிவுசெய்வதற்கு பின்பற்றப்பட்ட முறைமையியல் யாதென்பதையும்;

(vi) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1736/ '11

6.

கௌரவ பாலித ரங்கே பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் 2009ஆம் ஆண்டில் லொத்தர் விற்பனையொன்று நடத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி லொத்தருக்காக அச்சிடப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதில் விற்பனை செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி லொத்தர் விற்பனையின் மூலம் கிடைத்த மொத்த வருமானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி லொத்தர் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட சீட்டிழுப்பு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதில் வெற்றியீட்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) சீட்டிழுப்பு நடத்தப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரையில் சீட்டிழுப்பு நடாத்தப்படாமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1845/ '11

7.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம் அஸ்வர்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்செய்கையை விருத்தி செய்வதற்காக கிராமிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 12ஆம், 13ஆம் மற்றும் 14 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கை இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) — (ஒதுக்கப்பட்ட இருபத்திரண்டாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 17)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர் வாழ்வளித்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2011 செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதிய 1723/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

தொழிநுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 1718/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதிய 1727/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமாக 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1733/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 944)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1733/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 945)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1733/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 946)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்படுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2011 ஒற்றோபர் மாதம் 19 ஆம் திகதிய 1728/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011 ஒற்றோபர் மாதம் 19 ஆம் திகதிய 1728/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல்கள் இலக்கம் 939, 940, 941 மற்றும் 942)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2011 ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதிய 1728/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 943)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 17.

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 21.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 22.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 23.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 25.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 26.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 1725/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 30.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

31.

ரி.பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

இலங்கைப் புவிச்சரிதவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ பியரத்தன சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் பார்க்க.